செ.வெ.எண்: 10 **நாள்: 03.12.2016**

பத்திரிகைச்செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு விவசாயிகள் பயன்பெறுவதுடன் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை பெருக்கி பொதுமக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தும் கிராம ஊராட்சிகளில் ஒரு ஊராட்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பெருங்களூர் ஊராட்சி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் வீரப்பட்டி ஊராட்சி, விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் பேராம்பூர் ஊராட்சி, குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் லக்கனாப்பட்டி ஊராட்சி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் துவார் ஊராட்சி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கீராத்தூர் ஊராட்சி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் குலமங்கலம் வடக்கு ஊராட்சி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் ராஜேந்திரபுரம் ஊராட்சி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் இடையாத்திமங்கலம், ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்புனவாசல் ஊராட்சி, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் அரசம்பட்டி ஊராட்சி, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் தொட்டியம்பட்டி ஊராட்சி மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஓணாங்குடி ஊராட்சி ஆகிய இடங்களில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் கொட்டகை மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.90000ம், ஒன்றியப் பொதுநிதி ரூ.60000ம் என மொத்தம் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கொட்டகையில் 5 தொட்டிகள் அமைக்கப்பட்டு மண்புழு இயற்கை உரம் தயார் செய்யும் வகையில் மக்கும் இலை, தளைகள் மற்றும் சாணக்கரைசல் கொண்டு நிரப்பப்படும். 1 தொட்டிக்கு 2 கிலோ மண்புழுக்கள் என 4 தொட்டிகளில் 8 கிலோ மண்புழுக்கள் ரூ.1600 மதிப்பில் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மூலம் பெற்று வளர்க்கப்படுகிறது. இதன் மூலம் 30 நாட்கள் கழித்து 1 தொட்டிக்கு சுமார் 1 டன் மண்புழு உரம் கிடைக்கப்பெறும். இதன் மூலம் 4 தொட்டிகளில் 4 டன் மண்புழு உரம் கிடைக்கப்பெறும். மீதமுள்ள 1 தொட்டியில் மண்புழு உரம் சேகரிக்கப்படும்.

மேலும் இவ்வாறு கிடைக்கப்பெறும் மண்புழு இயற்கை உரம் 25 கிலோ பைகளில் அடைக்கப்பட்டு விவசாயிகளுக்கு 1 கிலோ ரூ.10 என்ற வகையில் வழங்கப்படும். இதன் கழிவு நீர் (வெர்மிவாஸ்) மிகச்சிறந்த கிருமிநாசினியாகும். இவை பாட்டிலில் அடைக்கப்பட்டு 1லி ரூ.10 என்ற வகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதனை செடி மற்றும் பயிர்களில் தெளிக்கும் பொழுது பிற பூச்சிகள் தாக்காது. இந்த இயற்கை உரம் தயாரிப்பதற்கான பராமரிப்பு உள்ளிட்ட மொத்த செலவு ரூ.5000 மட்டுமே. மீதமுள்ள அனைத்தும் இலாபமாகும். விராலிமலை ஊராட்சி ஒன்றியம், பேராம்பூரில் மண்புழு இயற்கை உரம் 1 டன் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.10000க்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளது. மேலும் கிருமிநாசினி ரூ.500க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊராட்சிகளுக்கு வருமானம் கிடைக்கப்பெறுவதுடன் பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். எனவே மண்புழு இயற்கை உரம் திட்டத்தினை செயல்படுத்துவதில் புதுக்கோட்டை மாவட்டம் முன்னோடி மாவட்டமாக உள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.